கும்பகோணம் அருகே நடைபெற்ற கல்லூரி பேருந்து விபத்தில் படுகாயமடைந்த மாணவ – மாணவியரை கும்பகோணம் அரசு தலைமை மருத்துவமனையில் கல்லூரி பேருந்து விபத்து குறித்து உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் நேரில் சென்று ஆறுதல் கூறி, அவர்களுக்கு நிவாரண உதவிகளை வழங்கினார். உடன் கும்பகோணம் மாநகர செயலாளர் சு.ப.தமிழழகன், திருப்பனந்தாள் மேற்கு ஒன்றியச் செயலாளர் கோ.க.அண்ணாதுரை, சார் ஆட்சியர் ஹிருத்யா விஜயன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் உள்ளனர்.

பெரம்பலூர் ஆம்னி பேருந்து பயணிகளிடம் அதிக கட்டணம் வசூலித்தால் நடவடிக்கை!

போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி. சிவசங்கர் தகவல்!

பெரம்பலூர், அக்,16 –

பெரம்பலூர் நகராட்சியில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் பெரம்பலூர் புதிய பேருந்து நிலையத்தில் மேம்பாட்டு பணிகள் ரூபாய் 4 கோடியே 73 லட்சம் மதிப்பிலும், தமிழ்நாடு நகர்ப்புற சாலை அபிவிருத்தி திட்டத்தின் கீழ் நகர சாலை அபிவிருத்தி 5 கோடியே 70 லட்சத்து 64 ஆயிரம் மதிப்பில் மேற்கொள்ளப் படவுள்ள பணிகள் துவக்க விழா நிகழ்ச்சி நேற்று புதிய பேருந்து நிலையம் பகுதியில் நடைபெற்றது, இதில் குன்னம் சட்டமன்ற உறுப்பினரும், போக்குவரத்து துறை அமைச்சருமான சா.சி. சிவசங்கர் தொடங்கி வைத்தார்.

அப்போது செய்தியாளர்களிடம் போக்குவரத்துத் துறை அமைச்சர் தெரிவித்தபோது, கடந்த தீபாவளி பண்டிகையின் போது ஆம்னி பேருந்து உரிமையாளர்கள் மற்றும் ஓட்டுநர் சங்கத்தினரிடம் பேசி கூடுதல் கட்டணம் வசூலிக்க கூடாது என்று அறிவுறுத்தப்பட்டது. அதே போல் அதிக கட்டணம் வசூலித்தவர்களிடமிருந்து பணத்தை திரும்ப பெற்று பயணிகளிடம் ஒப்படைக்கப் பட்டது, ஆனால் தற்போது ஆயுத பூஜையின் போது கூடுதல் கட்டணம் வசூலித்ததாக புகார் எழுந்ததைத் தொடர்ந்து, உடனடியாக போக்குவரத்துத் துறை ஆணையர் கூடுதல் கட்டணம் வசூலிக்கக் கூடாது என அறிவுரை வழங்கியுள்ளார், மேலும் வருகின்ற 24 ஆம் தேதி ஆம்னி பேருந்து உரிமையாளர்களுடன் பேசுவதற்கான கூட்டம் ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது, கூட்டத்தில் அவர்களுக்கு கூடுதல் கட்டணம் வசூல் செய்யக் கூடாது என அறிவுரை வழங்கப்படும் மேற்கொண்டு வசூலித்தால் அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்தார் தொடர்ந்து பேசிய அமைச்சர்,

மொபைல் ஆப் மூலமாக பதிவு செய்து செல்பவர்களை அரசு எதுவும் செய்ய முடியாது அது குறித்து புகார் கொடுத்தால் கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும், ஒவ்வொரு ஆண்டும் புதிதாக ஆம்னி பேருந்துகள் இயக்கப்படுகிறது. இவ்வாறு புதிதாக வருபவர்களுக்கு அரசின் நடைமுறைகள் தெரியாமல் கூடுதலாக வசூல் செய்து விடுகிறார்கள் அவர்கள் மீதும் கண்காணிப்பு தீவிர படுத்தப்படும், விழா காலங்களில் கூடுதல் பேருந்துகள் இயக்கப்படுவது என்பது அரசின் தொடர் நடவடிக்கை அந்த வகையில் அதுபோன்ற கூடுதல் பேருந்துகளை இயக்கி வருகிறோம் சில நேரங்களில், பேருந்துகள் தேவைப்படும் மார்க்கங்களில் புதிதாக சிறப்பு பேருந்து இயக்குவதற்கும், இதில் இரவு,பகல் முழுவதும் பேருந்துகளை இயக்கிய பணியாளர்களைக் கொண்டு மீண்டும் இயக்குவது பாதுகாப்பற்றது, அவர்களுக்கும் சிரமம் அதனால்தனியார் பேருந்துகளை இது போன்ற முக்கியமான விழா காலங்களில் இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது, ஆயுத பூஜை சரஸ்வதி பூஜையின் போது பரிச்சார்த்த முறையில் அந்த நடைமுறை செயல்படுத்தப்பட்டது. அதில் எந்தவிதமான சிரமமும் ஏற்படவில்லை. எனவே தீபாவளிக்கும் அது போன்று தனியார் பேருந்துகளை இயக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். அரசு முக்கிய நோக்கம் மக்களுக்கு அவர்கள் சொந்த ஊருக்கு சிரமமின்றி செல்ல வேண்டும் என்பதுதான், விழாக்களை அவர்கள் விருப்பம் போல கொண்டாடுவதற்கு வழிவகை செய்ய வேண்டும் என்பது எங்கள் நோக்கம், வழக்கமாக தமிழகத்தில் 20,000 பேருக்கு இயக்கப்பட்டு வருகிறது. திருவிழா காலங்களில் கூடுதலாக நான்காயிரம் அல்லது 5000 பேருந்துகள் இயக்க வேண்டும் என்றால் அதற்காக அரசு போக்குவரத்து கழகம் பேருந்துகளை வாங்கி நிறுத்தி வைத்திருக்க முடியாது, அந்த நாட்களில் மட்டும் தனியாக ஊழியர்களை நியமிக்க முடியாது அதனால் இடைக்கால நிவாரணமாகவே தனியார் பேருந்துகளை அரசு ஏற்று அந்தந்த வழித்தடங்களில் இயக்கப்படுவது தவிர்க்க முடியாதது ஆகிறது மக்களின் பயன்பாடு தனியார் பேருந்துகளை விட அதிகமாக அரசு பேருந்துகளை பயன்படுத்தி வருகின்றனர் முன்பதிவு செய்து பயணிப்பவர்களின் எண்ணிக்கை இரண்டு மடக்காக உள்ளது எனவே பயணிகளின் பாதுகாப்பான பயணத்திற்கு இந்த இடைக்கால ஏற்பாடுகளை செய்ய வேண்டி இருக்கிறது என தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் பெரம்பலூர் நாடாளுமன்ற உறுப்பினர் கே.என். அருண் நேரு, பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர் கிரேஸ் பச்சாவ், சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன், நகராட்சி தலைவர் அம்பிகா ராஜேந்திரன் மற்றும் தி.மு.க.வினர் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

முதலமைச்சர் – கழகத்தலைவர் அவர்களின் ஆணைப்படி தருமபுரி கிழக்கு மாவட்ட கழக தகவல் தொழில்நுட்ப அணிக்கு புதியதாக அறிவிக்கப்பட்ட மாவட்ட துணை, தொகுதி, ஒன்றிய, நகர, பேரூர் கழக ஒருங்கிணைப்பாளர்கள், தருமபுரி கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் தடங்கம் பெ.சுப்ரமணியை நேரில் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர். இந்நிகழ்வில் அரூர் பேரூராட்சித் தலைவர் சூர்யா தனபால், தகவல் தொழில்நுட்ப அணி மாவட்ட ஒருங்கிணைப்பாளர் எம்.பி. கௌதம், மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளர்கள் உதயசூரியன், ஜெ.ராஜேஷ் மற்றும் தொகுதி ஒருங்கிணைப்பாளர்கள் ரகு, கவின்குமார், காயத்ரி, முனியப்பன், ராகுல், நகர ஒருங்கிணைப்பாளர் முருகவேல் ஆகியோர் கலந்து கொண்டனர்.

முரசொலி செல்வத்தை என்னால் மறக்க முடியாது!

நான் 1966 நவம்பர் முதல் 1972 டிசம்பர் வரை முரசொலி பத்திரிகையில் துணை ஆசிரியராகப் பணியாற்றியவன். என்னை அவரிடம் அறிமுகப்படுத்தி அங்கே சேர்த்து விட்டவர் கலைஞர் வீட்டில் பணியாற்றிய கரு. செயல்மணி என்ற நண்பர் தான்.

நடிப்பிசைப் புலவர் கே.ஆர்.ராமசாமி அவர்களை சிறப்பாசிரியராகப் கொண்டு தஞ்சை வி.எஸ். ராசு என்பவர் நடத்திய "புரட்சிக் குயில்" என்ற பத்திரிகைக்கு ஆசிரியராகப் பணியாற்றினேன். அதில் கட்டுரை, தலையங்கம் எல்லாம் எழுதுவது நான்தான். அதை வி.எஸ். ராசு முரசொலிக்கு அனுப்பி வைப்பார். அதையெல்லாம் படித்த செல்வம் அவர்கள் முத்துலிங்கம் என்பவர் நன்றாக எழுதுகிறாரே. கவிதைகளும் நன்றாக இருக்கிறது என்று முரசொலியில் யாரிடமோ சொல்லிக் கொண்டிருந்திருக்கிறார். அதைக் கேட்ட செயல்மணி எனக்கு அவரை நன்கு தெரியும். எங்கள் சிவகங்கை மாவட்டத்தைச் சேர்ந்தவர்தான் அவர். அழைத்து வரட்டுமா என்று கேட்டிருக்கிறார். அழைத்து வாருங்கள் என்று செல்வம் சொல்லி இருக்கிறார்.

அவர் சொன்ன அந்த வாரத்திலேயே 'புரட்சிக் குயில்' பத்திரிகை நின்று விட்டது. இரண்டொரு நாள் கழித்து செயல்மணி அழைத்துச் சென்று செல்வத்திடம் அறிமுகப்படுத்தினார். அன்றைக்கே என்னை செல்வம் ஆசிரியர் குழுவில் சேர்த்துக் கொண்டார். 1966-ல் இருந்து 1968 வரை நான், அடியார், மணிமொழி, மா.பாண்டியன் ஆகிய 4 பேர்தான் முரசொலி ஆசிரியர் குழுவில் இருந்தோம்.

முத்துலிங்கமும், அடியாரும் ஒரு ஷிப்டிலும், மா.பாண்டியன், மணிமொழி ஒரு ஷிப்டிலும் பணியாற்றுங்கள் என்று செல்வம் தான் எங்களுக்குப் பொறுப்பைக் கொடுத்தார். 1968-க்குப் பிறகு முரசொலியில் பலர் சேர்ந்தார்கள்.

1966-ல் இருந்து எனக்குத் தங்கும் வீடாகவும் தாய் வீடாகவும் இருந்தது முரசொலிதான். முரசொலி தான் என் சிந்தனைப் பயிர்களுக்கு நீர்வார்த்த இடம். அதற்குக் காரணம் செல்வம்தான். நான் அறிந்தவரை பத்திரிகை நிர்வாகிகளில் செல்வத்தைப்போல் மனிதநேயமிக்க மனிதர்களைப் பார்த்ததில்லை. இன்றும் தொடர்ந்து முரசொலி படிப்பவர்களில் நானும் ஒருவன்.

முரசொலியில் அடிக்கடி என்னை கவிதை எழுதச் சொல்லி ஊக்குவித்தவர் செல்வம்தான். ஏதேனும் ஒன்றைப் பற்றிக் கவிதை எழுத வேண்டுமென்றால் ஆசிரியர் சொன்னார் என்று சொல்லித் தான் என்னைக் கவிதை எழுதச் சொல்வார். நாங்கள் கலைஞரைத்தான் ஆசிரியர் என்று அப்போது சொல்வோம்.

– கவிஞர் முத்துலிங்கம்
திரைப்படப் பாடலாசிரியர்,

1967-ல் புகழ் பெற்ற அண்ணா கவியரங்கம் புரசைவாக்கம் தர்மப் பிரகாஷ் மண்டபத்தில் நடைபெற்றது. சென்னைக்கு வந்த புதிதில் நான் கலந்துகொண்ட முதல் கவியரங்கம் அதுதான். கலைஞர்தான் அதற்குத் தலைமை தாங்கினார். சென்னையைப் பொருத்தவரை கவிக்கோ அப்துல் ரகுமானுக்கும் அதுதான் முதல் கவியரங்கம். கலைஞர் தலைமையில் முதன் முதல் நாங்கள் பாடிய கவியரங்கமும் அதுதான். அந்தக் கவியரங்கில் நான் கலந்து கொண்டதற்கு கவிஞர் கருணானந்தம், செல்வம், கலைஞர் மூவருமே காரணம்.

நான் பாடும்போது "முரசொலியில் எனைச் சேர்த்து முறையோடு ஆதரித்து வாழவைத்துப் பாடவைக்கும் வள்ளல் குணம் கொண்ட செல்வம் அவர்களுக்குச் சிரம் தாழ்ந்த என் வணக்கம்" என்று பாடினேன். சிலர் கைதட்டினார்கள்.

கவியரங்கம் முடிந்ததும் முரசொலி அடியாரிடம் என்னைப் பற்றியும் பாடுவார் என்று தெரிந்திருந்தால் நாமே கைதட்டுவதற்குச் சிலரை அழைத்துச் சென்றிருக்கலாமே என்று சிரித்துக்கொண்டே சொன்னாராம் செல்வம். அடியார் தான் இதைச் சொன்னார்.

ஒருமுறை சேலத்தில் கலைஞரைப் பற்றிய கவியரங்கம் நடந்தது. கண்ணதாசன் தான் அதை நடத்தினார். நான் அந்தக் கவியரங்கில் கலந்துகொள்ள வேண்டும் என்று கண்ணதாசன் முரசொலி அலுவலகத்திற்குத் தொலைபேசியில் என்னுடன் பேசினார்.

அதே கவியரங்கம் சென்னையிலும் நடந்தது. அன்றைய உள்ளாட்சித் துறை அமைச்சர் பாவலர் மா. முத்துச்சாமி அவர்கள் தலைமையில் அது நடந்தது. அந்தக் கவியரங்கில் நான், முடியரசன், பொன்னி வளவன், கண்ணதாசன், கருணானந்தம், கொத்தமங்கலம் சுப்பு போன்ற பல கவிஞர்கள் பாடினோம். தாய் என்ற தலைப்பிலே நான் பாடினேன். என் கவிதைக்குத்தான் அதிகக் கைதட்டல் கிடைத்தது. இந்தக் கவியரங்கக் கவிதைகள் புத்தகமாகவும் வெளிவந்தது. என் கவிதையைக் கண்ணதாசன் பாராட்டி அப்புத்தகத்திற்கு அணிந்துரை எழுதியிருந்தார். அந்தக் கவியரங்கை ஏற்பாடு செய்தவர் இளமுருகு பொற்செல்வி ஆவார்.

அதே கவியரங்கம்தான் சேலத்தில் கண்ணதாசனால் நடத்தப் பெற்றது. வேழ வேந்தன்தான் அக்கவியரங்கத்திற்குத் தலைவர். அதற்கு வர வேண்டுமென்று கண்ணதாசன் என்னை அழைத்த போது முரசொலியில் வேலையிருக்கிறது வர முடியாது. மன்னித்துக் கொள்ளுங்கள் என்றேன்.

நான் முனா கானாவிடம் (கலைஞர்) சொல்லிக் கொள்கிறேன். நீ அவசியம் வா என்றார் கண்ணதாசன். கொஞ்ச நேரத்தில் செல்வம் அவர்கள் என்னிடம் வந்து சேலத்தில் கலைஞரைப் பற்றிய கவியரங்கமாமே; கண்ணதாசன் பேசினார். நாங்கள் பார்த்துக் கொள்கிறோம்; நீங்கள் போய் வாருங்கள் என்றார். அதன் பிறகுதான் நான் சென்றேன். இப்படிப் பல முறை பல இலக்கிய நிகழ்ச்சிகளுக்கு அனுப்பி வைத்தவர் செல்வம். இன்றைய அமைச்சர் அண்ணன் துரைமுருகன் அவர்களும் முரசொலியில் என்னைக் கவிதை எழுதச் சொல்லி ஊக்கப்படுத்தியவர் என்பதையும் நான் சொல்லியாக வேண்டும்.

அந்த வகையில் செல்வம் அவர்களை என்னால் மறக்க முடியாது. அதனால்தான் மாற்றுக் கட்சியைச் சேர்ந்தவனாக இருந்தாலும் அவர் மறைவுக்கு வந்து அஞ்சலி செலுத்தினேன். உதவி செய்தவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் செய்த நன்றியை மறக்கக் கூடாது என்று எம்.ஜி.ஆர். அடிக்கடி எங்களிடம் கூறுவார். அந்த வகையில் நான் பல ருக்கு நன்றிக் கடன் செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். என் நன்றிக்குரிய முரசொலி செல்வத்தின் புகழ் வாழ்க.

முரசொலி செல்வம் மறைவு!

திருவாரூர் மாவட்டம் முழுவதும் திருவுருவப் படத்திற்கு மரியாதை!

திருவாரூர், அக்.16–

திராவிட இயக்கத்தின் கொள்கைகளை, தந்தை பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும், மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களும் வகுத்த பகுத்தறிவு சிந்தனைகளை தனக்கே உரிய பாணியில், எளிய நடையில் மக்களிடம் கொண்டு சேர்த்த பெருமைக்குரியவர் முரசொலியின் ஆசிரியராக இருந்த மரியாதைக் குரிய முரசொலி செல்வம் அவர்கள். அன்னாரது மறைவு செய்தி அறிந்து தமிழ் கூறும் நல்லுலகமே அதிர்ச்சி அடைந்திருந்தனர்.

திருவாரூர் மாவட்டச் செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ., அவர்களின் தலைமையில், சென்னை கோபாலபுரத்தில் வைக்கப்பட்டிருந்த முரசொலி செல்வம்அவர்களின் உடலுக்கு மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள் மற்றும் சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் நேரில் சென்று அஞ்சலி செலுத்தினர்.

தொழில்துறை அமைச்சர் டி.ஆர். பி.ராஜா, முன்னாள் அமைச்சர் தாட்கோ தலைவர் உ.மதிவாணன், தமிழக அரசின் சிறப்பு பிரதிநிதி ஏ.கே. எஸ்.விஜயன் உள்ளிட்டோரும் நேரடியாக அஞ்சலி செலுத்தினார்.

மாவட்டச் செயலாளர் பூண்டி. கே.கலைவாணன் எம்.எல்.ஏ., ஆலோசனைகளின்படி, திருவாரூர் மாவட்ட முழுவதிலும் உள்ள ஒன்றிய, நகர, பேரூர் மற்றும் வார்டு கழகங்களில் கழகத்தினர் முரசொலி செல்வம் அவர்களின் திருஉருவப் படத்திற்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தி, தலைமைக் கழக வேண்டுகோளின்படி கழக கொடியினை அரைக்கம்பத்தில் பறக்க செய்த்து துக்கம் அனுசரித்தனர்.

திருவாரூர் நகரகழக அலுவலகம் எதிரே மாவட்டச் செயலாளர் பூண்டி. கே.கலைவாணன் எம்.எல்.ஏ., மாவட்ட தி.மு.க. சார்பில் கழக நிர்வாகிகளுடன் முரசொலி செல்வம் அவர்களின் உருவப்படத் திற்கு மலர்மாலை அணிவித்து மரியாதையை செலுத்தினார்.

மாவட்ட ஊராட்சி தலைவர் தலையாமங்கலம் ஜி.பாலு, கழக சட்டத்திருத்தக்குழு உறுப்பினர் பி.ராஜமாணிக்கம், மாநில மாணவரணி துணை செயலாளர் மன்னை. த.சோழராஜன், மாநில விவசாய தொழலாளர் அணி துணை செயலாளர் இரா.சங்கர், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ஞானசேகரன், ஆர்.எஸ்.பாண்டியன் ,ப.ஆடலரசன், கோ.செல்வம் மற்றும் டி.செந்தில், செல்வ.ஜெயதேவன், ஆர்.முருகேசன் உள்ளிட்ட பொதுக்குழு உறுப்பினர்கள் அந்தந்த பகுதிகளில் நடைபெற்ற அஞ்சலி நிகழ்வுகளில் பங்கேற்றனர்.

மாவட்ட துணை செயலாளர்கள் எம்.எஸ்.கார்த்திக், எம்.ராமகிருஷ்ணன், சாந்தி பாஸ்கர், மு.வெங்கடேசன், ஒன்றிய செயலாளர்கள் வீ.அன்பரசன், கோ.தெட்சிணாமூர்த்தி, ஆர். பாலச்சந்திரன், சேகர்.கலியபெருமாள், எஸ்.ஜோதிராமன், ப.பிரபாகரன், நா.கவியரசு, கே.வி.கே.ஆனந்த், டி.எஸ்.டி.முத்துவேல், சித்தேரி சிவா, ஐ.வி.குமரேசன், வீ.எஸ்.ஆர். தேவதாஸ், பால.ஞானவேல், இரா.மனோகரன், ப.பிரகாஷ், புலிவலம் ஏ.தேவா, வே. மனோகரன், கேப்டன் செல்வராஜ், நகர செயலாளர்கள் வீரா.கணேசன், ஆர்.எஸ்.பாண்டியன், வாரை.எஸ்.பிரகாஷ், எம்.எஸ்.கார்த்திக், கூத்தா நல்லூர் பக்கிரிசாமி, ஆர்.ராஜசேகர், பா.சிவநேசன், ஏ.கே.டி.சேரன், நன்னிலம் பக்கிரிசாமி,பேரளம் தியாகு பூண்டி. கே.கலைவேந்தன் உள்ளிட்டோர் தலைமையிலும், மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் நா.இளையராஜா மற்றும் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் பனங்குடி ஏ.எஸ்.குமார் மற்றும் இளைஞரணி உள்ளிட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் தலைமையிலும், ஒன்றியக்குழு தலைவர்கள் சோம. செந்தமிழ் செல்வன், உமாப்ரியா, நகர மன்ற தலைவர்கள் மன்னை. த. சோழராஜன் புவனப்ரியா செந்தில், கவிதா பாண்டியன், பாத்திமா பஷீரா,மும்தாஜ் நவாஸ்கான், மகா லெட்சுமிமுருகேசன், முருகேசன் பக்கிரிசாமி உள்ளிட்டோர் தலைமையிலும் மறைந்த முரசொலி செல்வம் அவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வுகள் நடைபெற்றன.

இந்த அஞ்சலி நிகழ்வுகளில் கழக நிர்வாகிகள், கழகத் தோழர்கள், பத்திரிகையாளர்கள், பொதுமக்கள் என பெருந்திரளானோர் பங்கேற்று மறைந்த முரசொலி செல்வம் அவர்களுக்கு அஞ்சலி செலுத்தினர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

வழக்கறிஞர் நா. குப்புசாமி
அக்டோபர் 16 (1994)

இளமைக்காலம் முதல் இயக்கத்தில் தன்னை இணைத்துக் கொண்டவர். கழகத்தில் பொதுக்குழு உறுப்பினர், மாவட்ட துணைச் செயலாளர், மாவட்டப் பொறுப்பாளர் என பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்.

1974ல் தலைவர் கலைஞர் அவர்கள் தலைமையில் தஞ்சையில் நடைபெற்ற தீண்டாமை ஒழிப்பு மாநாட்டில் முன்னிலை வகித்தார். அதோடு தனது பகுதியில் தீண்டாமை ஒழிப்பு பிரச்சாரத்தை செய்தவர்.

தாழ்த்தப்பட்ட வகுப்பில் பிறந்த இவர் சிறந்த வழக்கறிஞராகவும் பணியாற்றியவர்.

கழகத் தோழர்களின்மீது தொடுக்கப்பட்ட பல வழக்குகளில் ஆஜராகி அவர்களுக்காக வாதாடியவர்.

கழகம் அறிவித்த விலைவாசி உயர்வுப் போராட்டம் உள்ளிட்ட அனைத்துப் போராட்டங்களில் பங்கேற்றுள்ளார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

பரங்கிமலை எஸ். வேணுகோபால்
அக்டோபர் 16 (1994)

இளமைக் காலத்திலேயே தந்தை பெரியாரின் கொள்கைகளிலே நாட்டம் கொண்டு, பேரறிஞர் அண்ணா – தலைவர் கலைஞர் ஆகியோர் தலைமையில், தொடர்ந்து கழகப் பணியாற்றி வந்தவர் இவர்.
25 ஆண்டுகளுக்கும் மேலாக பரங்கிமலை கிளைக் கழகச் செயலாளராகவும் – பரங்கிமலை நகரியக் கழகத்தின் முதல் செயலாளராகவும் பணியாற்றியவர்.

தொடர்ந்து முப்பதாண்டு காலம் பரங்கிமலை கண்டோண்மென்ட் உறுப்பினராகவும் – இருமுறை கண்டோண்மென்ட் துணைத் தலைவராகவும் பணியாற்றியவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

"பரங்கிமலைப் பகுதியிலே கழகத்தை வளர்த்த தொண்டர்களில் மறைந்த வேணுகோபால் அவர்களும் ஒருவர். கட்சியிலே உள்ள தனிப்பட்டவர்களைவிட – கழகத்தின் ஒட்டுமொத்த நலன்தான் முக்கியம் எனக் கருதி, கழகத்தின் வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டவர். எனது அன்பைப் பெற்றவர்" என தலைவர் கலைஞர் அவர்களால் புகழ்ந்துரைக்கப்பட்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.